# இரண்டாம் தவணைமாதிரிப் பரீட்சை - 2020

| தரம் - 09 | வரலாறு | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையமாக விளங்கிய இடம்.
   1) கோவா 2) சென்னை 3) பத்தேவியா 4) மும்பாய்.

2) இலங்கையின் மட்டக்களப்பு பிரதேசத்தில் தரையிறங்கிய ஒல்லாந்து தளபதி.
   1) பன் எங்கல் பெக் 2) ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்ஜன்
   3) கலன் அல்பஸ் 4) கொர்னேலியஸ் டெக்ஸ்

3) "திரிசிங்களாதீஸ்வர" என்ற சிறப்புப் பெயரைப் பயன்படுத்திய கண்டி மன்னன்.
   1) 1ம் இராஜசிங்கன் 2) 1ம் விமலதர்ம சூரியன்
   3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4) 2ம் இராஜசிங்கன்.

4) பாரம்பரிய சுதேச உத்தியோகத்தர்களுக்கு கங்காணி, உடையார் போன்ற பதவிப் பெயர்கள் பயன்படுத்தப்பட்ட இராசதானி
   1) யாழ்ப்பாணம் 2) கோட்டை 3) கண்டி 4) அநுராதபுரம்.

5) ஒல்லாந்தரின் மிக முக்கிய பொருளாதார நடவடிக்கையாகக் கொள்ளக் கூடியது.
   1) நிலங்களிலிருந்து வரி அறவிடல்.
   2) முத்து, யானைத்தந்தம் ஏற்றுமதி செய்தல்.
   3) மிளகு, சாதிக்காய், ஏலம் ஏற்றுமதி செய்தல்
   4) கறுவா வர்த்தகம் செய்தல்.

6) இலங்கையில் பறங்கியர் என்ற இனம் தோற்றம் பெறக் காரணமான ஐரோப்பிய இனத்தவர்.
   1) போத்துக்கேயர் 2) ஒல்லாந்தர் 3) ஸ்பானியர் 4) ஆங்கிலேயர்.

7) இலங்கை பிரித்தானிய முடிக்குரிய நாடாக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணியாக அமைவது.
   1) அதிகளவில் வரியினை அறவிட முடிந்தமை.
   2) வரி அறவிடும் உத்தியோகத்தர்கள் குறைவாக இருந்தமை.
   3) பிரான்சியரின் ஆதிக்கம் நிலை பெறும் எனக் கருதியமை.
   4) இரட்டை ஆட்சி முறை தோல்வியடைந்தமை.

8) இலங்கையில் இரட்டை ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதி.
   1) கி.பி 1796 – 1798 2) கி.பி 1796 – 1802
   3) கி.பி 1798 – 1802 4) கி.பி 1798 – 1815

9) பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடிந்தமையில் செல்வாக்குச் செலுத்திய பிரதான விடயம்.
   1) ஜோன் டொயிலியன் புத்திசாலித்தனமான உளவு நடவடிக்கை.
   2) மன்னன் கண்டி இராச்சிய ஆட்சியுரிமையை விரும்பாமை.
   3) பிரித்தானியப் படைகளை மக்கள் அதிகம் விரும்பியமை.
   4) மலையகத்தின் காலநிலை பிரித்தானியருக்குச் சாதகமாக அமைந்தமை.

10) இலங்கையின் வாழ்வாதார விவசாயம் வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரித்தானியரின் நடவடிக்கை.

1) கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்தியமை.
2) விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கியமை.
3) நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தமை.
4) இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.

11) தேசிய கலாசாரத்தின் மேன்மையை மக்களுக்கு உணர்த்துவதில் முன்னோடியாகச் செயற்பட்ட தலைவர்களில் ஒருவர்.

1) எஹலபொல 2) ஜோன் த சில்வா 3) பிலிமத்தலாவ 4) மொல்லிக் கொட

12) டீ.பி . ஜாயா அவர்கள் இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்காக ஆற்றிய பணிகளில் ஒன்றாக அமைவது.

1) முஸ்லீம் நேசன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டமை.
2) மத்ரஜா என்ற பாடசாலை முறையினை அறிமுகம் செய்தமை.
3) சிலோன் முஸ்லீம் ரிவியூ என்ற சஞ்சிகையில் தொடர்ச்சியாக எழுதியமை.
4) முஸ்லீம் கல்விச்சபையை ஆரம்பித்தமை.

13) இந்தியாவில் உள்நாட்டு ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் மோதல்களில் ஈடுபட்ட ஐரோப்பிய இனத்தவர்.

1) பிரித்தானியர் - பிரான்சியர்.
2) பிரித்தானியர் - ஒல்லாந்தர்.
3) போத்துக்கேயர் - ஒல்லாந்தர்.
4) ஒல்லாந்தர் - பிரான்சியர்

14) இந்திய தேசிய சங்கத்தைத் தோற்றுவித்து சமய மறுமலர்ச்சிக்கு முதலில் வித்திட்டவர்.

1) மகாத்மா காந்தி 2) மங்கல் பாண்டே
3) பகதுர்ஷா 4) ராம் மோகன் ரோய்.

15) இந்திய தேசிய சங்கத்தின் தீவிரவாதத் தலைவர்களில் ஒருவர்.

1) பால கங்காதர திலகர் 2) W.C பானர்ஜி
3) தாதாபாய் நபரோஜி 4) சுரேந்திரநாத் பானர்ஜி

16) இந்தியாவின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் ஒருவரான தாதாபாய் நபரோஜிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்.

1) உலக அபிமானி 2) இந்தியாவின் மேன்மையாளர்
3) தேசத் தலைவன் 4) பாரதத்தின் பிதா

17) பிரித்தானியார் தமது அதிகாரத்தை ஜாவா, சுமாத்ரா தீவுகளில் நிலைநாட்டுவதற்குத் தடையாக இருந்த ஐரோப்பிய நாட்டவர்.

1) போத்துக்கேயர் 2) ஒல்லாந்தர் 3) பிரான்சியர் 4) ஸ்பானியர்.

18) "லங்கோயகார" என்ற அச்சகத்தை நிறுவி பெத்தசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

1) மீதெட்டுவத்த குணானந்த தேரர். 2) வஸ்கடுவே ஸ்ரீ சுபுதி தேரர்.
3) ஹென்றி ஸ்பீல் ஒல்கொட் 4) தம்மதலங்கார ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்.

19) அரசாங்க செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக கோல்புறூக் ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகளில் ஒன்றாக அமைவது.

1) சட்டவாக்ககக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் அறிமுகம்.
2) மலைநாட்டையும், கரையோரத்தையும் இணைத்து நிர்வாகம் செய்தல்.
3) ஆங்கிலக் கல்வி முறை அறிமுகம்.
4) அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்படல்.

20) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனும் அவனது மனைவியும் பிரத்தானியப் படைகளுக்கு அஞ்சிப் பதுங்கியிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட இடம்.
1) தந்துரே 2) கம்பளை 3) வாகிரிகல 4) போமுரே

(2x20=40 புள்ளி)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) அ)

1) இரண்டாந் தவணையில் வரலாறு பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகையினை எழுதுக? (1 புள்ளி)
2) நீர் கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகினை எழுதுக? (1 புள்ளி)
3) கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினை எழுதுக? (2 புள்ளிகள்)
4) கணிப்பீட்டிற்காக நீர் மேற்கொண்ட செயற்பாடுகள் இரண்டினை எழுதுக? (2 புள்ளிகள்)

ஆ) கீழே தரப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய இடங்களுக்குரிய எழுத்துக்களை இலங்கைப் படத்தினை அவதானித்து ஒழுங்குமுறையில் எழுதுக?

1) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் புகையிலை உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற இடத்தினைக் குறிக்கும் எழுத்து.
2) பிரித்தானியரின் இலங்கை மீதான கவனத்துக்குக் காரணமான துறைமுகத்தினைக் குறித்து நிற்கும் எழுத்து.
3) ஹென்றி ஸ்பீல் ஒல்கொட் அவர்கள் வந்திறங்கிய இடத்தினைக் குறிக்கும் எழுத்து.
4) ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் சுதந்திரமான தனி அரசாகச் செயற்பட்ட இரசதானியைக் குறிக்கும் எழுத்து.
5) பிரித்தானியருக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் மத்திய நிலையத்தைக் குறிக்கும் எழுத்து.
6) ஐம்பெரும் விவாதங்களில் சர்வதேச அளவில் பிரசித்தி பெற்ற விவாதம் இடம் பெற்ற இடத்தைக் குறிக்கும் எழுத்து.

(1x6 =6 புள்ளி)

02)

1) ஒல்லாந்தருடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்ட கண்டி இராச்சிய மன்னர்கள் இருவரை எழுதுக. (2 புள்ளிகள்)
2) கண்டி இராச்சியத்தில் ஆட்சி புரிந்த நாயக்க வம்சத்து மன்னர்கள் மூவரை எழுதுக. (3 புள்ளிகள்)
3) ஒல்லாந்தர் ஆட்சியின் போது பொருளாதாரத்துறையில் ஏற்படுத்தப்பட்ட நான்கு மாற்றங்களை எழுதுக. (3 புள்ளிகள்)
4) ஒல்லாந்தர் ஆட்சியின் போது பொருளாதாரத்துறையில் ஏற்படுத்தப்பட்ட நான்கு மாற்றங்களை எழுதுக. (4 புள்ளிகள்)

03)

1) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் நியமிக்கப்பட ஆள்பதிகள் இருவரை எழுதுக. (2 புள்ளிகள்)

2) கண்டி இராச்சிய மன்னர்களைச் சந்தித்த ஆங்கிலத் தூதுக் குழுக்கள் மூன்றினை எழுதுக. (3 புள்ளிகள்)

3) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சி இடம்பெற்ற மூன்று சந்தர்ப்பங்களையும் தருக. ( 3 புள்ளிகள்)

4) கண்டி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நான்கு விடயங்களை எழுதுக. (4 புள்ளிகள்)


04)

1) ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியால் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் அறிவிட்ட வரிகளில் மூன்றினைத் தருக? (3 புள்ளிகள்)

2) 1818 ம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக முதலாவது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் மூவரின் பெயர்களைத் தருக? (3 புள்ளிகள்)

3) கண்டி இராச்சிளம் மீது பிரித்தானியரை படையெடுக்கத் தூண்டிய காரணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

4) பிரித்தானியர் ஆட்சிக்கெதிராக 1818 ல் முதலாவது சுதந்திரப் போராட்டம் இடம் பெற்றமைக்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)



# வரலாறு

## தரம் 9 அலகு 2 இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி

### மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1) இலங்கை முழுவதனையும் ஆட்சி செய்த மேலைத்தேச இனத்தவர்.

1. ஒல்லாந்தர் 2. போர்த்துக்கேயர் 3. பிரான்சியர் 4. பிரித்தானியர்

2) பிரித்தானியர் இலங்கைக்கு முதலில் வந்திறங்கிய இயற்கை துறைமுகம்.

1. கொழும்பு 2. காலி 3. திருகோணமலை 4. மட்டக்களப்பு

3) இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆள்பதி.

1. பிரட்டிக்நோத் 2. றொபேட்வுறண்றிக் 3. தொமஸ்மெயிட்லன்ட் 4. எட்வேட்பாண்ஸ்

4) 1818ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திர கிளர்ச்சிக்கு தலைமைதாங்கியவர்.

1. மொல்லிகொட திஸாவை 2. பிலிமத்தலாவ திஸாவை 3. கெப்பட்டிபொல திஸாவை
4.வீரபுரன் அப்பு

5) 1848ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிரான போராட்டத்திற்கு உடனடி காரணமாய் அமைந்த நிகழ்வு.

1. கோல்புறூக் கமறன் சீர்திருத்தத்தின் விளைவுகள் 2. பௌத்த சமயம் கவனியாது விடப்பட்டமை
3. தரிசுநிலச்சட்டம் கொண்டுவரப்பட்டமை 4. ஆளுநர் டொரிங்டனின் புதியவரிக் கொள்கை.

கீறிட்ட இடத்திற்கு பொருத்தமான சொல்லைவைத்து இடவெளி நிரப்புக.

1. 1762ஆம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை ……………….. என்ற பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியின் பிரதிநிதி சந்தித்தான்.
2. 1822ஆம் ஆண்டு…………………… என்பவர் கம்பளை சிங்கபிட்டியவில் கோப்பி தோட்டத்தை முதலில் ஆரம்பித்தார்.
3. திஸ்ஸமகாராமக் குளத்தை ……………………. என்னும் பிரித்தானிய ஆள்பதி புனரமைப்பு செய்தான்.
4. விவசாயிகளின் நலன் கருதி 1911 ஆம் ஆண்டு மக்கலம் ஆளுநரால் ………………… இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
5. தென்னை ஆராய்ச்சி நிலையம் …………………… என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

அ. பகுதியுடன் ஆ பகுதியினை தொடர்புபடுத்தும் போது வரும் சரியான விடைத்தொகுதி

| 1) நிகழ்வு | தொடர்புபட்டவர் |
| --- | --- |
| 1. இறுதி ஒல்லாந்து ஆள்பதி | A. மீயுறன் குழு |
| 2. 1762ஆம் ஆண்டு இலங்கை வந்த ஆங்கிலேய பிரதிநிதி | B. ஜோன்டொய்லி |
| 3. 1797 ஆம் ஆண்டு கிளர்ச்சியை ஆய்வு செய்ய வந்த குழு | C. ஜோன்பைபஸ் |
| 4. கண்டி கைப்பற்றப்படுவதற்கு உதவியவன் | D. பன்ளங்கள் பெக் |

1. DCAB 2. CDAB 3.DCBA 4. BADC

2) ஆண்டு — தொடர்புடைய நிகழ்வு

1. 1796 — A. இலங்கை முழுவதும் பிரித்தானியர் கைப்பற்றல்
2. 1798 – 1802 — B. இலங்கையின் கரையோரம் பிரித்தானியர் வசம் ஆதல்
3. 1948 — C. இரட்டை ஆட்சி
4. 1815 — D. இலங்கை சுதந்திரம் அடைதல்

1. CDBA 2. BCDA 3.BADC 4. ABDC

3) ஆள்பதி — புனரமைத்த குளம்

1. ஹென்றி வாட் — A. கந்தளாய் குளம்
2. ஹர்கியூலிஸ் ரொபின்சன் — B. இறக்காமம் குளம்
3. வில்லியம்ஸ் கிரகெரி — C. திஸ்ஸமகாராமைக் குளம்
4. ஆதர் கோடன் — D. வளவ கங்கையை அண்டிய குளம்

1. ADBC 2. BCAD 3.CADB 4. BACD

4) ஆள்பதி — பயிர்செய்கை நடவடிக்கை

1. எட்வட் பாண்ஸ் — A. கூட்டுறவுச் சங்க இயக்கம்
2. ஜேம்ஸ் டேலர் — B. நீர்ப்பாசனத் திணைக்களம்
3. வெஸ்ட் றிஜ்வே — C. தனியார் கோப்பி தோட்டம்
4. மக்கலம் — D. தேயிலைத் தோட்டம்

1. DCBA 2. DCAB 3.ACDB 4. CD BA

5) அ. பகுதி — ஆ. பகுதி

1. பிரித்தானியர் இலங்கைவருதல் — A. கியூகடிதம்
2. முதலாவது ஆள்பதி — B. பிரட்டிக்நொத்
3. 1848 கிளர்ச்சிக்கு கரணமான ஆள்பதி — C. டோரின்டன்
4. ஜோன் டொயிலியை நியமித்தல் — D. தோமஸ் மெயிட்லண்ட்

1. ADBC 2. ACBD 3.ABDC 4. ABCD

## பகுதி II

**சுருக்கமான விடை தருக.**

1. பிரித்தானியர் இலங்கைமீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் மூன்று தருக.
2. இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் மூன்று தருக.
3. திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் மூன்று தருக.
4. வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கையின் முக்கியத்துவம் மூன்று தருக.

5. பின்வரும் ஆண்டுகளில் கண்டியின் ஆட்சியாளர்களையும் அவர்களை சந்தித்த பிரித்தானிய தூதுவர்களையும் தருக.

6. 1797ஆம் ஆண்டு கரையோரக் கலகத்திற்கான காரணங்கள் மூன்று தருக.

7. கண்டி அரசனுக்கும் பௌத்த குருமாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்ட காரணமான நிகழ்வுகள் மூன்று தருக.

8. 1848ஆம் ஆண்டு போரட்டத்தலைவர்கள் மூவரை தருக.

9. கோல்புறூக் ஆணைக்குழு பெருந்தோட்ட பயிர் செய்கையை விருத்தி செய்வதற்கு முன்வைத்த ஆலோசனைகள் மூன்று தருக.

10. செலவினை குறைப்பதற்கு கோல்புறூக் ஆணைக்குழு முன்வைத்த ஆலோசனைகள் மூன்று தருக.

### சுருக்கமான விடை தருக.

1. 1803ஆம் ஆண்டு பிரட்டிக்நோத் கண்டிமீது படையெடுத்தமைக்கான காரணங்கள் நான்கு தருக.
2. கண்டி அரசனுக்கும் பிரதானிகளுக்கும் இடையே முரன்பாடு ஏற்பட காரணமான நிகழ்வுகள் நான்கு தருக.
3. கண்டி உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நான்கு தருக.
4. 1818ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்திற்கு வளிவகுத்த காரணிகள் நான்கு தருக.
5. 1818ஆம் ஆண்டு சுதந்திர போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் நான்கு தருக.
6. 1818ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்தின் விளைவுகள்கள் நான்கு தருக.
7. 1848ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்திற்கான காரணங்கள் நான்கு தருக.
8. 1848ஆம் ஆண்டு சுதந்திர போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக.
9. 1848ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்தின் விளைவுகள் நான்கு தருக.
10. தனியார் முதலீட்டை ஊக்கிவிப்பதற்கு கோல்புறூக் ஆணைக்குழு முன்வைத்த கொள்கைத் திட்டங்கள் நன்கு தருக.

# வரலாறு

## தரம் 9 அலகு 2 இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி

## விடைகள்

### மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1. பிரித்தானியர்
2. திருகோணமலை
3. பிரட்டிக்நோத்
4. கெப்பட்டிபொல திஸாவை
5. ஆளுநர் டொரிங்டனின் புதியவரிக் கொள்கை.

### கீறிட்ட இடம்

1. ஜோன் பைபஸ்
2. ஜோர்ஜ் பேர்ட்
3. ஹர்கியூலிஸ் ரொபின்சன்
4. கூட்டுறவுச் சங்க
5. லுணுவில

### தொடர்புபடுத்தல்

1. DCAB
2. BCDA
3. BCAD
4. DCBA
5. ABCD

சுருக்கமான விடை தருக.

1) இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்

திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை பெற்றிருந்த முக்கியத்துவம்

மேலைத்தேச– கீழைத்தேச கடற்பாதையின் மத்திய நிலையமாக இலங்கை அமைந்திருந்தமை

2. இந்தியாவிற்கு தென்கிழக்காக தனித்த தீவாக அமைந்திருந்தமை

பல இயற்கை துறைமுகங்களைக் கொண்டிருந்தமை

3. வங்காள விரிகடாவையும் தென்கிழக்கு ஆசியாவையும் நோக்கி அமைந்த இயற்கை துறைமுகமாக இருந்தமை

2. ஆபத்தான சூறாவளிகளிலிருந்து கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாயிருந்தமை

3. ஆங்கிலேயர் இந்துசமுத்திரத்தில் பிரான்சியருடன் மேற்கொண்ட கடற் சண்டைகளின்போது திருகோணமலைத் துறைமுகம் போர் நடவடிக்கைகளில் முக்கியமாயிருந்தமை.

4)1. உயர்தரமான கறுவாவையும் ஏனைய வாசனைத் திரவியங்களையும் உதாரணம் :- மிளகு, கராம்பு, ஏலம், சாதிக்காய்) பெற்றுக்கொள்ளக்கூடியதாகயிருந்தமை

2. வாசனைதிரவியங்கள் தவிர யானைகள், முத்து, மாணிக்கம், போன்ற வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் காணப்பட்டமை.

3. பிரித்தானியாவின் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை ஒன்றை இந்நாட்டில் உருவாக்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.

5) 1. 1762 இல் ஜோன் பைபஸ், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை சந்தித்தான்
2. 1782 இல் ஆண்டில் ஹியு போயிட், இராஜாதி இராஜசிங்க மன்னனை சந்தித்தான்
3. 1795 ஆம் ஆண்டு றொபேட் அன்றூஸ், இராஜாதி இராஜசிங்க மன்னனை சந்தித்தான்

6) 1.ஆங்கில கழக்கிந்திய கம்பனி புதிய வரிகள் பலவற்றை விதித்தமை.(உ-ம் தென்னை , உப்பு, புகையிலை, மீன)
2. வரிவசூலிக்கும் உள்நாட்டு உத்தியோகத்தரை நீக்கிவிட்டு சென்யில் இருந்து அழைத்து வரப்பட்ட அவுமில்தாரர்கள் என்னும் உத்தியோகத்தரை நியமித்தமை.
3. பண்டமாக வரிசெலுத்துவதற்கு பதிலாக பணமாக வரி அறவிட்டமை.

7) 1. பரணதல இளம் பிக்குமார் பலருக்கும் இராசத் துரோகக் குற்றச் சாட்டின் பேரில் மரணதண்டனை விதித்தமை.
2. தலதா மாளிகை அருகில் மேற்கொள்ளப்பட்ட நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பிக்குமாரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமை.
1. போகம்பரை வாவியை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின்போது போயமலு விஹாரையையும் நான்கு தேவாலயங்களையும் அகற்றுவதற்கு அரசன் எடுத்த தீர்மானத்தைப் பௌத்த விரோத நடவடிக்கையாகப் பிக்குமார் கருதியமை.

8) 1. கொங்காலேகொட பண்டா

2. புரன் அப்பு

3. டிங்கிரால

9)1. அரசாங்க காணிகளை விற்கும் கொள்கை ஒன்றைச் செயற்படுத்தல்

2. உள்நாட்டு வெளிநாட்டு தனியார்முதலிட்டாளர்களுக்குத் காணிகளை பணம் கொடுத்து வாங்குவதற்கான சந்தர்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3.தனியார் முதலீட்டாளரின் நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையில் கொள்கைகளை வகுத்தல்.

10)1. மலைநாட்டடையும் தாழ்நாட்டையும் இணைத்து நிருவாகம் நடத்துதல்

2. குடியியல் சேவையாளர்களின் தொகையைத் குறைத்தலும் அவர்களின் சம்பளத்தைக் குறைத்தலும்.

**சுருக்கமான விடை தருக.**

1) 1. ஆங்கிலேயரின் ஆட்சிப் பிரதேசங்களில் வாழும் மக்களும் கண்டி மன்னரையே தமது ஆட்சியாளராகக் கருதியமை

2. கரையோரத்தில் இடம்பெறும் கிளர்ச்சிகளுக்கு கண்டி இராச்சிய மன்னன் உதவுவதாக ஏற்பட்ட சந்தேகம்
3. கொழும்பு– திருகோணமலை தரைமார்க்கத் தொடர்புகளுக்குக் கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.
4. பிரித்தானியருக்கு எதிராக மன்னன் பிரான்சியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சந்தேகம்.

2. 1. பிரபுக்கள் சிலருக்க வழங்கப்பட்டிருந்த உத்தியோகப் பொறுப்புகளை அரசன் தனது நாயக்கவம்ச உறவினருக்கு வழங்கியமை

2. நாட்டு மக்களுக்குத் தீங்கிழைத்த பிரபுக்களுக்கு அரசன் தண்டனை வழங்கியமை

3. தன்னைப் பதவியில் அமர்த்துவதற்குப் பாடுபட்ட மகா அதிகாரம் பிலிமத்தலாவைக்கு மரண தண்டனை விதித்தமை

4. பிரபுக்களிடையே பிரச்சினைகள் உருவாக்கும் வண்ணம் பதவிகளை வழங்கியமை.

3. 1. 2ஆம் உறுப்புரையில் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னன் அரியணையிலிருந்து அகற்றப்பட்டதாகவும் அவனுடைய அனைத்து உறவினர்களுக்கும் கண்டி அரியணைமீதான சகல உரிமைகளிலிருந்தும் நீக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

2. பிரதானிகளின் உரிமைகள் பதவிகள் பாதுகாக்கப்படும்.

3. பௌத்த மதமும் சமய குருமார்களும் தூபிகளும் விஹாரைகளும் பாதுகாக்கப்படும்.

4 .அங்க வீனப்படுத்தும் பழைய தண்டனை முறைகளை ஒழிப்பதாகவும் மரண தண்டனை விதித்தல் ஆளுநரின் உத்தரவின் பேரில் இடம்பெற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. 1. அரசன் ஒருவன் இல்லாமற் போனமையால் மக்களிடையே ஏற்பட்ட மனச் சஞ்சலம்.

2. பிரித்தானியராட்சியின்கீழ் பௌத்த மதம் அழிவடைந்துவிடும் எனும் அச்சம்.

3. பிரிதானிகளின் அதிகாரங்களும் சலுகைகளும் வருமான வழிகளும் பாதிப்புற்றமை.

4. உடனடிக்காரணம் சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெல்லஸ்ஸப் பிரதேச மடிகே முஹாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டதற்குச் சிங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்பு

5. 1. போராட்டம் முறையாகத்திட்டமிடப்படாமை

2. ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான அடக்குமுறைகளுக்கு போராளிகளால் முகங்கொடுக்க முடியாமை

3. போராட்ட தலைவர்களிடையே காணப்பட்ட தனிப்பட்ட மத்தாங்கல்கள்

4. அரசனாக முன்வந்த துரைசாமி போலியானவன் எனத் தெரியவந்தமையால் போராலிகள் அதைரியமடைந்தமை.

6. 1. போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய கெப்பட்டிபொல, மடுகல்ல என்னும் தலைவர்கள் இரானுவ நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

2. எஹலபொல உள்ளிட்ட இன்னொரு பிரிவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

3. ஆண்டு கண்டி ஒப்பந்தம் கைவிடப்பட்டு 1818 கண்டிப் பிரகடனம் மூலம் ஆங்கிலேயர் அதிகாரம் உறுதிசெய்யப்பட்டது.

4. கண்டிப்பிரதானிகளின் அதிகாரங்களும் சலுகைகளும் நீக்கப்பட்டு அவை பிரித்தானிய அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

7.1 .ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக் கொள்கை

2. பௌத்த சமயம் கவனியாது விடப்பட்டமை

3. கிராமிய விவசாயமும் மக்களின் வாழ்க்கை நிலைமையும் சீர்குலைந்தமை

4. கோல்புறூக் கமறன் சீர்திருத்தத்தின் விளைவுகள்

8. 1. கிளர்ச்சி சில பிரதேசங்களில் மட்டுமே இடம்பெற்றமை.

2. ஆளுநர் டொரிங்டன் மார்ஷல் லோ எனும் இராணுவச் கட்டத்தைப் பிறப்பித்து சில நாட்களக்குள் போராட்டத்தை அடக்கி தலைவர்களை கைதுசெய்வதற்கு நடவடிக்கைகளை மெற்கொண்டான்.

3 .கடஹபொல தேரர், புரன் அப்பு, டிங்கிரால ஆகியோர் இரானுவ நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

4. பேலி என்பவரின் தலைமையில் விசாராணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

9. 1. ஆளுநர் டொரிங்டன், குடியேற்ற நாட்டுச் செயலாளர் எமர்ஸன் டெனன்ட் என்போர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

2. கடை வரி,நாய்வரி என்பலை நீக்கப்பட்டதோடு முத்திரைவரி, துப்பாக்கிவரி ஆள்வரி என்பவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

3. விவசாயத்தயும் நீர்பாசன நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

4. சட்டவாக்கக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஐரோப்பிய முதலீட்டாளர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

10.1.கறுவா, உப்பு என்பவற்றை விற்பதற்கு அரசாங்கத்திடம் காணப்பட்ட ஏகபோக உரிமையை இரத்துச் செய்தல்.

2. கமரனின் நீதிமன்றச் சீர்திருத்தங்கள்
3. சேமிப்பு வங்கி ஒன்றை அமைத்தல்
4. கட்டாய இராஜகாரிய உழைப்பு முறையை இரத்துச் செய்தல்

# வரலாறு

## தரம் 9 அலகு 3 இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி

1. இலங்கையை ஆட்சிபுரிந்த மேலைத்தேச இனத்தவர்கள் மூவரை முறையே குறிப்பிடுக.
2. போர்த்துக்கேயரின் ஆட்சியினால் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட மதம் எது?
3. ஒல்லாந்தரின் வருகையினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மதம் எது?
4. பிரித்தானியர் தமது மதத்தினை பரப்புவதற்காக உருவாக்கிய அமைப்பு எது?
5. பிரித்ததானியருடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் தோற்றம் பெற்ற மிஷனரிகள் நான்கின் பெயர்களைத் தருக.
6. மிஷனரிகள் சிறப்பாக செயற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்கள் நான்கு தருக.
7. மிஷனரிகளின் வெளியிடுகளுக்கு நான்கு உதாரணம் தருக.
8. சமய எழுச்சி உருவாகுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்று தருக.
9. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நான்கு தருக.
10. பின்வரும் தேரர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவேனாக்களின் பெயர்களைத் தருக.

    வலானே சித்தார்த்த தேரர் -

    ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர் -

    இரத்மலானை ஸ்ரீ தர்மலோக்க தேரர் -

11. இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட முதலாவது அச்சகத்தின் பெயர் என்ன?
12. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக பிரசுரிக்கப்பட்ட வெளியீடுகளுக்கு நான்கு உதாரணம் தருக.
13. ஐம்பெரும் விவாதங்களை தலைமை ஏற்று நடத்தியவர் யார்?
14. ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்களைத் தருக?
15. பாணந்துறை விவாதத்தினால் கவரப்பட்டு இலங்கை வந்த அமெரிக்க அறிஞரின் பெயர் என்ன?
16. ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக உருவாக்கிய சங்கம் எது?
17. ஹன்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்களுடன் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக ஒன்றாக சேர்ந்து செயற்பட்ட நான்கு தலைவர்களைக் குறிப்பிடுக.
18. பிரம்மஞான சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு நான்கு உதாரணம் தருக.
19. ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகள் நான்கு தருக.
20. தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக முன்னின்று உழைத்த தலைவர்கள் நால்வரை குறிப்பிடுக.
21. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக செயற்பட்டவர் தலைவரின் பெயர் என்ன?
22. அநகாரிகதர்மபால அவர்களின் சேவைகள் நான்கு தருக.
23. ஆறுமுக நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் பெயர் என்ன
24. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்துசமய மறுமலர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் நான்கு தருக.

25. பரமேஸ்வரா வித்தியாலயம் இராமநாதன் வித்தியாலயம் போன்ற ஆரம்பபாடசாலைகளை நிறுவியவர் யார்.

26. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்கு தோண்டாற்றியவர் யார்.

27. அறிஞர் சித்திலெப்பை ஆற்றிய பணிகள் நான்கு தருக.

28. டீ.பி.ஜயா இஸ்லாமியர் இடையே சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆக்கங்களை எழுதிய பத்திரிகையின் பெயர் என்ன?

# வரலாறு

## தரம் 9 அலகு 3 இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி

1. இலங்கையை ஆட்சிபுரிந்த மேலைத்தேச இனத்தவர்கள் மூவரை முறையே குறிப்பிடுக.

   போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்

2. ஒல்லாந்தரின் வருகையினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மதம்.
   புரட்டஸ்தாந்து மதம்
3. பிரித்தானியர் தமது மதத்தினை பரப்புவதற்காக உருவாக்கிய அமைப்பு.
   மிஷனரி
4. பிரித்ததானியருடைய அட்சிக்காலத்தில் இலங்கையில் தோற்றம் பெற்ற மிஷனரிகளுக்கு நான்கு உதாரணம் தருக.

   லண்டன் மிஷனரி இயக்கம்

   பெப்டிஸ்ட் மிஷனரி இயக்கம்

   அமெரிக்கன் மிஷனரி இயக்கம்

   வெஸ்லியன் மிஷனரி இயக்கம்

   சேர்ச் மிஷனரி இயக்கம்

5. மிஷனரிகள் சிறப்பாக செயற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்கள் நான்கு தருக.

   அரசாங்க உதவிகள் கிடைத்தல்

   சமயத்தைப் பரப்புவதற்குக் கல்வியைப் பயன்படுத்திக் கொள்ளல்

   அச்சங்கங்களை நிறுவுதல்

   புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வெளியிடக்கூடிய நிதிவசதிகயைக் கொண்டிருந்தமை.

   மிஷனரிகளிடையே காணப்பட்ட கட்டமைப்பு ரீதியான பலம்.

6. மிஷனரிகளின் வெளியிடுகளுக்கு நான்கு உதாரணம் தருக.

   மாசிக்க தேக்க

   உரகல

   லங்கா நிதானய

   உதயதாரகை

7. சமய எழுச்சி உருவாகுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்று தருக.

   மிஷனரிமாரின் சமயப் பிரச்சாரத்தால் தேசிய சமயங்கள் தாக்கப்பட்டமை

சிங்கள, தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை

பிரித்தானியர் ஆட்சியால் தமது சமய கலாசாரம் அழிவுறும் எனும் உணர்வு மக்களிடையே தோன்றியமை.

8. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நான்கு தருக.

பிரிவெனாக்கள் ஆரம்பிக்கப்பட்டமை

அச்சகங்களை அமைத்தமையும் அச்சு ஊடகங்களைக் கையாண்டமையும்

விவாதங்களை மேற்கொண்டமை

பௌத்த பாடசாலைகளை நிறுவியமை

தேசிய கலாச்சாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை

9. பின்வரும் தேரர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவேனாக்களை தருக.

வலானே சித்தார்த்த தேரர் - இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவேனா

ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர் - மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா

இரத்மலானை ஸ்ரீ தர்மலோக்க தேரர் - பேலியாகொட வித்தியாலங்கார பிரிவெனா

10. இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட முதலாவது அச்சகம்.

லங்கோபகார

11. பௌத்தசமய மறுமலர்ச்சிக்காக பிரசுரிக்கப்பட்ட வெளியீடுகளுக்கு நான்கு உதாரணம் தருக.

லக்மினி பஹன

சரசவி சந்தரெஸ

சிங்கள ஜாதிய

சிங்ஹள பௌத்தயா

12. ஐம்பெரும் விவாதங்களை தலைமை ஏற்று நடாத்தியவர் யார்.

மீகெட்டுவத்த குணானந்த தேரர்

13. ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்களைத் தருக.

பத்தேகம

வராகொட

உதம்விட

கம்பளை

பாணந்துறை

14. பாணந்துறை விவாதத்தினால் கவரப்பட்டு இலங்கை வந்த அமெரிக்க அறிஞர்.

ஹென்றி ஸ்டீல் ஓல்கொட்

15. ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக உருவாக்கிய சங்கம்.

பிரம்மஞான சங்கம்

16. ஹன்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்களுடன் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக ஒன்றாக சேர்ந்து செயற்பட்ட நான்கு தலைவர்களைக் குறிப்பிடுக.

ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர்

இரத்மலானை தர்மாலோக்க தேரர்

மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்

அநகாரிக தர்மபால

17. பிரம்மஞான சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு நான்கு உதாரணம் தருக.

கொழும்பு ஆனந்தா வித்தியாலயம்

காலி மஹிந்த வித்தியாலயம்

கண்டி தர்மராஜ வித்தியாலயம்

நாவலப்பிட்டி அநுருத்த வித்தியாலயம்

கொழும்பு மியூசியஸ் வித்தியாலயம்

18. ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகள் நான்கு தருக.

பௌத்த பாடசாலைக்களுக்கான நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னோடியாகச் செயற்பட்டமை

ஞாயிறு சமயப்பாடசாலைகளை ஆரம்பித்தமை

வெசாக் தினத்தை அரசாங்க விடுமுறையாக்குவதற்குப் பாடுபட்டமை

பௌத்த கொடியை நிர்மாணிப்பதில் பிக்குமாருடனும் தலைவர்களுடனும் சேர்ந்து பங்களிப்பு செய்தமை

சரசவி சந்தரெஸ பத்திரிகையின் மூலம் பௌத்த மக்களை அறிவூட்டியமை

19. தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக முன்னின்று உழைத்த தலைவர்கள் நால்வரை குறிப்பிடுக.

ஜோன் த சில்வா

டீ.பி ஜயதிலக

வலிசிங்ஹ ஹரிச்சந்திர

பியதாச சிறிசேன

21. கொழும்பு பௌத்த இளைஞர்சங்கத்தை ஆரம்பதில் முன்னோடியாக செயற்பட்டவர்.

டீ.பி ஜயதிலக

22. அநகாரிகதர்மபால அவர்களின் சேவைகள் நான்கு தருக.

பௌத்த பாடசாலைகளை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபட்டமை

இலங்கையர்களை மதுபாவனையில் இருந்து விடுவிப்பதற்காக மதவிலக்கு இயக்கத் தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டமை

புத்தகயா உட்பட இந்தியாவின் வழிபாட்டு இடங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பாடுபட்டமை

சிங்ஹள பௌத்தயா எனும் பத்திரிகையையும் மஹாபோதி எனும் சஞ்சிகையையும் வெளியிட்டமை

23. ஆறுமுக நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் பெயர்.

உதயபானு

24. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்துசமய மறுமலர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் நான்கு தருக.

இலங்கையில் இந்து மத மறுமலர்ச்சிக்குத் தலைமைத்துவத்தை வழங்கியமை

இந்து சமயப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டமை

இந்து சமய, கலாசாரத்தையும் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டமை

பால பாடம் போன்ற பெயரில் பாடநூல்களை எழுதியதோடு கந்தபுராணம், பெரியபுராணம் எனும் நூல்களையும் பதிப்பித்தமை.ட

25. பரமேஸ்வரா வித்தியாலயம் இராமநாதன் வித்தியாலயம் போன்ற ஆரம்பபாடசாலைகளை

நிறுவியவர் யார்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

26. இஸ்லாமிய சமயமறுமலர்ச்சிக்கு தொண்டாற்றியவர் யார்.

எம்.சி.சித்திலெப்பை

27. அறிஞர் சித்திலெப்பை ஆற்றிய பணிகள் நான்கு தருக.

பாடசாலைகளை நிறுவியமை உதாரணம் கொழும்பு மருதானை சாஹிராக் கல்லூரி

முஸ்லிங்களை அறிவூட்டுவதற்காக முஸ்லிம் நேசன் எனும் சஞ்சிகையும் முஸ்லிம் கல்விச் சேவையும் ஆரம்பித்தார்

இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

மத்தரஸா என்னும் இஸ்லாமியரின் சமய பாடசாலையை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தார்

28. டீ.பி.ஜயா இஸ்லாமியர் இடையே சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆக்கங்களை எழுதிய பத்திரிகை எது?